வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 33/2023

வழக்கு சாட்சி LW2 /PW2

| பெயர் | கமலக்கண்ணன் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | பூபாலன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 38 |

தேதி 05.02.2025

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மணலியில் குடியிருந்து வருகிறேன். மதியம் 12 மணியளவில் 3 ஆண்டுகளுக்கு முன்பு எம்எம்டிஏ மாத்தூரில் நான் டீ குடித்துக்கொண்டிருந்தேன். அப்போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றுகொண்டிருந்த சைக்கிள் மீது வடக்கிலிருந்து கிழக்கில் திரும்பிய இருசக்கர வாகனம் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது. ஆஜர் எதிரிதான் இருசக்கர வாகனத்தினை ஓட்டிவந்த நபர். சைக்கிளில் வந்த நபர் கீழே விழுந்து தலையில் அடிபட்டது. 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சைக்கிளில் வந்த நபர் பெயர் அர்ஜுனன் அவர் எனது வீட்டின் அருகே தான் இருந்தார். அதனால் எனக்கு அவரை தெரியும். ஒரு வாரம் கழித்து அவர் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் ஆஜர் ஆகியும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணையானது முடிக்கப்பட்டது.